செ.வெ.எண்.43 நாள்.24.01.2018.

திருநெல்வேலியில் மாவட்ட அளவிலான தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

-------

திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில், மாவட்ட அளவிலான தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம் இன்று (24.01.2018) நடைபெற்றது. இம்முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். மேலும், தொழில் முனைதல் குறித்த ஓவியப்போட்டி மற்றும் வினாடி,வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

தமிழ்நாட்டில் கிராம பகுதியிலுள்ள தொழில் முனைவோர்கள், வேலையற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில், மாவட்ட தொழில் மையம் மூலமாக அந்தந்த பகுதியில் உள்ள தொழில் முனைவோர்களை கண்டறிந்து சுய வேலை வாய்ப்பு அவர்களது பகுதியிலேயே பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் தொழில் முனைவோர்கள் ஊக்குவிப்பு முகாம்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மாவட்ட தொழில் மையம் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலும் இதுபோன்ற முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் தொழில் முனைவோர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தும் வகையில், நமது மாவட்டத்தில் 2017–18ம் ஆண்டிற்கு ரூ.5.53 கோடி மானியம் ஆண்டு இலக்காக கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.3.00 கோடி அளவிலான மானியங்கள் வழங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகிறது. இம்முகாமில், கலந்து கொண்டுள்ள நீங்கள் சுயமாக தொழில் தொடங்குவதில் உள்ள நன்மைகள், தொழில் வாய்ப்புகள், லாபகரமான தொழில்களை தேர்வு செய்வது எப்படி, தொழில் துவங்க வழங்கப்படும் மானிய உதவிகள், திட்டங்கள் குறித்த ஆலோசனைகளும் இப்பயிற்சியில் நிபுணர்களால் உங்களுக்கு வழங்கப்படவுள்ளது. அரசின் பல்வேறு துறைகளின் மூலமும் இதுபோன்று பல திட்டங்கள் உள்ளது. இவைகள் அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். தொழில் தொடங்குவதற்கு முன்பு தொழில் நிறுவனங்களில் பணியாற்றி, அனுபவம் பெற்று தொழில் தொடங்குவதும் சிறப்பாக அமையும். இங்கு வழங்கப்படும் பயிற்சியில் உங்களது சந்தேகங்களுக்கு தீர்வு காண வேண்டும். நீங்கள் தொழில் தொடங்கி சிறந்த தொழில் அதிபர்களாக விளங்கி, சிறப்பாக வெற்றி பெற வேண்டுமென பேசினார்.

தொடர்ந்து, தொழில் முனைதலின் சிறப்பு மற்றும் தொழில் தேர்ந்தெடுப்பது எப்படி, திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் வங்கி கடன் பெறும் வழிமுறைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், அண்ணா பல்கலைக்கழக முதல்வர் முனைவர்.ஜி.சக்திநாதன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.வெ.கா.வெங்கடேஸ்வரன், மாவட்ட முன்னோடி வங்கி அலுவலர் திரு.கஜேந்திரநாதன், சென்னை EDII ஒருங்கிணைப்பாளர் திரு.ஏ.கே.சுப்பிரமணியம், நெல்சிடியா செயலாளர் திரு.சஞ்சய் குணசிங், மாவட்ட தொழில் மைய திட்ட மேலாளர் திரு.எஸ்.கணேசன் மற்றும் அலுவலர்கள், தொழில் முனைவோர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.